# தமிழர்களின் எளிமை பிடிக்கும்!

## சென்னையில் மும்பை குயில்



ஷிபானி காஷ்யப் பாட்டோடு கவர்ச்சியையும் கலந்து கொடுக்கும் டு இன் ஒன் மசாலா பாடகி. இந்த மும்பை சரக்கை தமிழ்நாட்டுக்குக் கொண்டு வந்திருக்கிறார் 'சாய்ந்தாடு சாய்ந்தாடு' இயக்குநர் கஸாலி.

சென்னை வந்திருந்த ஷிபானியுடன் நம்ம தமிழ்நாடு கர்நாடக இசைப் பாடகி சாருலதா மணியைச் சந்திக்க வைத்து ஜுகல்பந்தி நடத்தினோம்.

"இப்ப முதன்முதலா தமிழுக்கு வந்திருக்கீங்க எப்படி ஃபீல் பண்றீங்க" என்று சாருலதா கேள்வியைப் போட்டதும் வெகு உற்சாகமானார் ஷிபானி.

"மும்பையில நான் பாடகியா அறிமுகமாவதற்கு முன்னாடியே சென்னைதான் என் இசை வாழ்க்கைக்கு முதல் சுழியைப் போட்டுக் கொடுத்தது. இந்த உண்மை பலருக்கும் தெரியாது. என்னோட முதல் இசை ஆல்பத்தை சென்னையில வச்சுதான் ரெக்கார்ட் பண்ணினேன். இப்ப ஏ.ஆர்.ரஹ்மான் மியூசிக் ஸ்கூல்ல சிஇஓவா இருக்காரே செல்வக்குமார் அவரோட மேற்பார்வையிலதான் என் ஆல்பம் தயாராச்சு" என்றவர், தானே எழுதி இசையமைத்த பாடலை





பாடிக் காட்டினார்.

பாடி முடித்த பின் சாருலதா மணியைப் பார்த்தவர், "நீங்க கர்நாடிக் சிங்கர்னு சொன்னாங்க. வெஸ்டர்ன் பாட்டும் பாடுவீங்களா? பெரிய ஹிட் சாங்கை பாடியிருக்கீங்கனு கேள்விப்பட்டேன்" என்று துருவ ஆரம்பித்தார்.

"சமீபத்துல விஜய் படத்தில் 'கிலானிலே கிலானி' பாடினேன். பட்டிதொட்டி முழுக்க ரீச்சாயாச்சு" என்றவர் "என் உச்சி மண்டைல கிர்ர்ர்ங்குது. உன்ன நான் பார்க்கையில கிர்ர்ர்ங்குது." பாட்டை பாடிக்காட்ட குஷியாகிவிட்டார் ஷிரானி.

"ஆக்சுவலி தமிழ் கேட்டால் எப்பவும் ரிதமிக்கா இருக்கும் வார்த்தைகளை அழுத்தி உச்சரிக்கறதும் ரொம்ப வேகமாக் சொல்றதும் ஜாஸ்தினு கேள்விப்பட்டிருக்கேன். ஆனா, இவ்வளவு ரிதமிக்கா இருக்கும்னு யோசிக்கவே இல்லை. ரியலி அமேசிங் லாங்க்வேஜ்" என்றார். அதோடு இந்தி மொழியின் ரிதமிக் பற்றி விளக்கினார். 'இது என்ன ரிதம், எங்க தமிழ் ரிதத்தை அடிச்சுக்க முடியாது' என்றபடி அருணகிரிநாதரின் 'முத்தைத்தரு பத்தித் திருநகை அத்திக்கிறை சத்திச் சரவண முத்திக்கொரு வித்துக் குருபர' திருப்புகழ் பாடல் வரிகளை சாருலதா பாடிக்காட்ட அரண்டுபோய் ஆஃப் ஆகிவிட்டார் ஷிரானி.

சென்னையில் என்ன பிடிக்கும்?

"அகன்று விரிந்து கிடக்கும் மெரினா பிடிக்கும். இந்த மக்கள் அதிக பகட்டு இல்லாமல் போலி கௌரவத்திற்காக வாழாமல் மிக எளிமையாக இருப்பது பிடித்திருக்கிறது. காஞ்சிபுரம் புடவை பெஸ்ட்டுன்னு சொன்னாங்க. பல வருஷ பாரம்பரியம் உள்ள பொக்கிஷம்னு சொன்னதால ரெண்டு புடவை வாங்கச் சொல்லியிருக்கேன்" என்றார்.

- க.திருநாவுக்கரசு

படங்கள்:

ஆர்.சண்முகம்